An AIChE Technology Alliance
CCPS Center for Chemical Process Safety
www.aiche.org/ccps

Process Safety Beacon
http://www.aiche.org/CCPS/Publications/Beacon/index.aspx
Messages for Manufacturing Personnel

This issue sponsored by
ioMosaic®
Minimizing risk. Maximizing potential.®
www.iomosaic.com

# களத்தூய்மை 'அழகுக்காக' மட்டுமல்ல - பாதுகாப்பையும் சார்ந்ததுதான்

*January 2020*



## என்ன நடந்தது?

100 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கும் சர்க்கரை ஆலை அது.; களத்தூய்மை பற்றி அதிகம் கவனம் செலுத்தாத ஆலை.

எந்திரங்களை சுற்றியும் கட்டமைப்புகளின் மீதும் சிந்திய சர்க்கரை , குவியல் குவியலாக இருந்தது. குவியலின் ஓரிடத்தில் ஏற்பட்ட அடைப்பின் காரணமாக சர்க்கரை தூசுப்படலம் ஏற்பட்டு அது பற்றிக்கொண்டதால் பெரியதொரு வெடிவிபத்து ஏற்பட்டது. 14 பேர் உயிரழந்தனர். 38 பேர் காயமடைந்தனர். அந்த தொழிற்சாலையே முற்றிலுமாக அழிந்து விட்டது.

## ஏன் நடந்தது?

சர்க்கரை ஒரு எரியக்கூடிய பொருள். அது எளிதில் பற்றிக்கொள்ளாத பொருளாக கருதப்பட்டாலும் ஒரு வெடிப்பு ஏற்பட்டால் அதிலிருந்து கிடைக்கும் ஆற்றலில் எளிதாக பற்றிக்கொள்ளக்கூடியதுதான் .

முதலில் ஏற்படும் ஒரு வெடிப்பு அருகில் உள்ள சர்க்கரை குவியலை எரிபொருளாகக் கொண்டு அடுத்தடுத்து இரண்டாம் நிலை வெடிப்புகளை ஏற்படுத்தும். இதனால் வெடிவிபத்தின் விளைவுகள் தீவிரமாக இருக்கும். அந்த ஆலையில் பணியிடத்தை தூய்மையாக வைத்திருக்க சரியான முறை கிடையாது. கடந்த வருடங்களில் ஒருசில தீ விபத்துகள் ஏற்பட்டடிருந்தாலும் அதன் படிப்பிணைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(காண்க: சி எஸ் பி விசாரணை - இம்பீரியல் சர்க்கரை - தீ & வெடிவிபத்து 02/07/2008 அறிக்கை *2008-05-I-GA-6 - 09/24/2009)*

## உங்களுக்கு தெரியுமா?

- உற்பத்தியில், பேக்கிங் செய்யும் பொது, மேலும் பலதருணங்களில் பிளாஸ்டிக், காகிதம், அட்டைப்பெட்டிகள், மரக்கட்டைகள் போன்றவை குவித்து வைக்கப்பட்டிருக்கும. வெடி/ தீ விபத்து ஏற்படும்போது இவை எரிபொருளாக பயன்பட்டு விளைவுகளை தீவிரமாக்கும். இதனை குறைக்க களத்தூய்மை முக்கியம்..
- தீயணைப்பு போன்ற பாதுகாப்பு சாதனங்களை வடிவமைக்கும்போது, தூசி அல்லது பிற கொட்டப்பட்ட பொருட்கள் உட்பட்ட அதிகப்படியான எரிபொருள் கணக்கிடப்படாமல் இருக்கலாம் .
- கச்சாப்பொருட்கள் உற்பத்தி இடைநிலை பொருட்கள், உற்பத்தி முடிந்த தயார் பொருட்கள் ஆகியவற்றில் ஏற்படும் கசிவும் சிதறலும் உற்பத்தி திறனை பாதிக்கும் .
- களத்தூய்மை என்பது சிதறல்களை அகற்றுவது மட்டும் இல்லை. பயனற்ற எந்திரங்கள் பேக்கிங் பொருட்கள் போன்றவற்றை முறையாக வைத்துக்கொள்வதும்தான்.
- உலோக துகள்கள் அல்லது பிசுறுகள் வெடி/தீ விபத்தை ஏற்படுத்தக்கூடியவை. எரியும் பொருட்களுக்கு எந்த அளவு கவனம் செலுத்துகிறோமோ அதே அளவுக்கு மேற்கூறிய பொருட்களுக்கும் கவனம் செலுத்த வேண்டும்.

## நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

- உங்கள் பணியிடத்தில் களத்தூய்மை சிறக்க என்ன வேண்டும் என்பதை புரிந்து கொண்டு அதன்படி செயல்படவும்.
- களத்தூய்மைசெய்யும்போது கிடைக்கும் பொருட்களை கையாளவும் அப்புறப்படுத்தவும் சரியான முறைகளை பின்பற்றவும்.
- உலோகக்கழிவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தீங்கு கொண்டவை. அது என்ன என்பதை தெரிந்துகொண்டு அதற்கேற்றவாறு கையாளவும்..
- கழிவுப்பொருட்களின் மூலம் என்னவென்று தெரியவில்லையெனில் பாதுகாப்பு அதிகாரிகளை அணுகி எத்தகைய தற்பாதுகாப்பு சத்தங்களை பயன்படுத்த வேண்டும் என்று ஆலோசனை பெற்றுக்கொள்ளவும்.
- களத்தை பார்வையிட செல்லும்போது களத்தூய்மை போதுமானதாக இல்லையென்றால் அதை மேலதிகாரிக்கு தெரியப்படுத்தவும். அத்தகைய குறைகளை உடனுக்குடன் சரி செய்துவிடுவது மிகவும் நல்லது.

**களத்தூய்மை - பாதுகாப்பை உயர்த்தும்**

©AIChE 2019. All rights reserved. Reproduction for non-commercial, educational purposes is encouraged. However, reproduction for any commercial purpose without express written consent of AIChE is strictly prohibited. Contact us at ccps_beacon@aiche.org or 646-495-1371.

**The Beacon is usually available in Afrikaans, Arabic, Catalan, Chinese, Czech, Danish, Dutch, English, Filipino, French, German, Greek, Gujarati, Hebrew, Hindi, Hungarian, Indonesian, Italian, Japanese, Korean, Malay, Marathi, Mongolian, Persian (Farsi), Polish, Portuguese, Romanian, Russian, Spanish, Swedish, Tamil, Telugu, Thai, Turkish, Urdu, and Vietnamese.**